போது ஸ்டோன் ஹவுஸ் ஹில் என்ற இடத்தைக் கேட்டிருக்கிறோம். அது தகுதியான இடம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார். அந்த இடம் கிடைத்த பிறகு மாணவர் விடுதி கட்டுவதன் மூலமாக விடுமுறைக் காலத்தில் பயணிகள் அங்கு தங்கும் வகையில் புதிய திட்டம் இருக்கிறது.

கஸ்தூரிபா காந்தி கன்னியா குருகுலம்.

வினா—*444 : திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேதாரண்யம்-மகராஜபுரம், கஸ்தூரிபா காந்தி கன்னியா குருகுலத்திற்கு நமது அரசு செய்துவரும் உதவிகள் யாவை ?

(இ) இந்தக் குரு குலத்திற்கு மேலும் உதவிகள் செய்யும் செயற்குறிப்பு எதுவும் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) வேதாரண்யம், மகராஜபுரத்திலுள்ள கஸ்தூரிபா காந்தி கன்னியா குருகுல அனாதை இல்லம் பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளி ஒன்றினையும், அனாதை இல்லம் ஒன்றினையும் நடத்தி வருகிறது. கீழே விவரமாகக் கொடுக்கப்பட்டுள்ளவாறு, மானிய உதவி விதிக் கோவையில் விதித்த முறைகளுக்கிணங்க இந்த நிலையங்களுக்கு அரசாங்கம் உதவித் தொகை வழங்குகிறது.

	சிறுவர்களுக்கான விடுதி.	உயர்நிலைப் பள்ளி.
1966–67 ..	ரூ. 8,631	ரூ. 1,157.
1967–68	ரூ. 6,917	ரூ. 1,334.

கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு கருவிகள் முதலியவற்றை வாங்குவதற்கான மானியமாக 1967–68-ல் ரூ. 4,400 வழங்கப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

Another dam across Cauvery near Mettur Dam.

***445 —Q.—THIRU N. KASIRAMAN :** Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal before the Government for the construction of another dam across the river cauvery either at the upstream or at the downstream of Mettur Dam ?

மு.ப 9–39 **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

திரு. நா. காசிராமன் : மழை காலங்களில் அதிகமாக வருகிற தண்ணீர் கடலில் விடப்படுகிறது. ஆகவே, ஹொகனக்கல்—மேட்டூருக்கு இடையே நடுவில் ஒரு அணை கட்டி அத் தண்ணீரைத் தேக்கினால் மழை இல்லாத காலத்தில் அது பயன்படுமென்று முன்பு பொதுவாகப் பேசப்பட்டு வந்ததே, அது எப்போது எடுத்துக்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா : மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு மேற்புறத்தில் ஹொகனக்கல் அருகில் ஓர் அணையைக் கட்ட சில தொடக்க ஆய்வு வேலைகளை மேற்கொள்ளப்பட்டன கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பாசன வசதி ஒன்றும் கிடையாது.

1969 மார்ச் 24]

திரு. எஸ். ஆறுமுகம் : தற்போது மேட்டூர் அணையின் கீழ் ஒரு அணை கட்ட இயலவில்லை என்றாலும், தற்போதுள்ள அணையை மேலும் ஒரு பத்து அடி உயர்த்த உத்தேசமுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி ஒரு உத்தேசம் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. எம். சுரேந்திரன் : ஹொகனக்கல் திட்டம் பற்றி மைசூர் அரசாங்கம் ஏதோ ஆட்சேபணைகள் எழுப்பியதன் காரணமாக அது நின்றிருக்கிறது என்று சொல்லப்படுகிறதே அது உண்மையா ? அப்படியானால் அந்த ஆட்சேபணைகளை மாற்றி விரைவில் அதைத் துவக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா. ஏற்கனவே குறிப்பிட்டது போல் கடிதப் போக்கு வரத்து நடைபெற்றுக்கொண்டு வருகிறது. முடிவு ஏற்படவில்லை.

திரு. ஆர். கருப்பையா : திருச்சி மாவட்டத்தில் அப்பர் அணைக்கட்டில் "ரெகுலேட்டர் கட்டி பாசன வசதிகள் அளிப்பதற்காக $1\frac{1}{4}$ கோடிரூபாயில் ஒரு திட்டமிட்டிருக்கிறார்களே, அது இந்த வருடத்தில் செயல்படுத்தப் படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இக் கேள்வி மூலக் கேள்வியோடு தொடர்பு உடையதாக இல்லை.

திரு. கே. விநாயகம் : போதுமான அளவிற்கு மழை இல்லாதபோது வெள்ளப் பெருக்கு இல்லை. ஆயினும் சில ஆண்டுகளில் அதிகப்படியான வெள்ளம் வந்து நம் அணைகளையெல்லாம் மீறி தண்ணீர் பிறகு கடலில் போகும் நிலைமை இருக்கிறது. அந்தக் காலத்தில் அதைத் தடுத்து நிறுத்தி நமக்குப் பயன்படக்கூடிய அளவிற்கு அப் ஸ்ட்ரீமில் அல்லது டவுன் ஸ்ட்ரீமில் அணை கட்டுவதில் என்ன கஷ்டம் இருக்கிறது. அதன் மூலம் தண்ணீரைச் சேகரித்து வைக்கலாம் அல்லவா ? இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் அவர்களின் நியாயமான கேள்விக்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். 1961–ல் முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்தது. இதனால் பாசன வாயில்கள் உடைப்பெடுத்து சேதம் அடைந்தன. எனவே, வெள்ளத்திற்கான காரணங்களை ஆராயவும், காவிரி வடி நிலத்தில் வெள்ளப் பெருக்கினைக் குறைக்கவும், வெள்ளத்தால் ஏற்படும் தீங்குகளை மட்டுப்படுத்தவும், தகுந்த நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை கூறுவதற்கு சிறப்பு அதிகாரி ஒருவரை அரசாங்கம் நியமித்தது. மேல் அணைக்கட்டின் இரண்டு கால்களிலும் தக்க அளவில் நீர் விடப்படுவதற்கு உறுதியான ஏற்பாடாகவும், கொள்ளிடத்தில் சரியானபடி நீர் வடியச் செய்து அதனைக் கட்டுப்பாட்டில் வைக்கவும் காவிரி குறுக்கே மேல் அணைக்கட்டில் 1.80 கோடி மதிப்பீட்டுச் செலவில் தடுப்புச் சுவர் ஒன்றைக் கட்ட வேண்டும் என்று சிறப்பு அதிகாரி ஆலோசனை கூறினார். அது பரிசீலிக்கப்பட்டது. ஆனால் நிதி நிலைமை காரணமாக இத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் கேள்வி கேட்கலாம். ஆனால் அமைச்சர் பதில் சொல்ல வேண்டுமென்று வற்புறுத்த முடியாது.

திரு எஸ். ஆறுமுகம் : மழை காலத்தில் தண்ணீர் வந்து வீணாக அது கடலில் போய் சேருகிறது. சேலம் மாவட்டத்தில் 10,000 ஏக்கர்களுக்கு பாசன வசதி அளிக்கும் வகையில் இப்படி ஒடுகிற ஆற்றின் மத்தியில் இரண்டு மூன்று இடங்களில் தடுப்பு ஏற்படுத்தி உபரி தண்ணீரை அங்குள்ள நிலப் பகுதிகளுக்கு பாசன வசதிக்கு கொடுக்கக் கூடிய வகையில் இதை பரிசீலனை செய்ய அரசாங்கம் முன்வருமா ?